EGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ :இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 13உ வியாழன் (25—4—57) ★ ★ வெளியூர்: சித்திரை 14உ வெள்ளி (26—4—57) இதழ் [272

'உருக்குத் தொழிற்சாலையை தென்னகத்தில் ஏன் துவங்கக் கூடாது?'

'மறுப்பதற்கான நியாயம் ஏதேனும் உண்டா?'

'வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்து பெருங்கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏன்?'

'தென்னவரின் குரலுக்கு மதிப்பளிக்க இந்தியப் பேரரசு முன்வருமா?'

'நெய்வேலித் திட்டத்துடன் தொழில்கள் அனைத்தையும் இணைக்கும் நிலைகூடாது'

இரும்பு வர்த்தகர் சங்கம் குரலெழுப்புகிறது

சென்னை, ஏப். 25—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டில் உற்பத்திச் செய்யப்படும் இரும்பு - உருக்கின் அளவைக் கொண்டுதான் அந்த நாட்டின் தொழில் வளர்ச்சி மதிப்பிடப்படும்.

"இவ்வுயர்ந்த உலோகத்தை உற்பத்தி செய்வதை 1956-ல் நாம் துவங்கி இருக்கின்றோம் என்றும் சொல்லப்படுகிறது. அதிகக் கனிப் பொருளைக் கொண்டுள்ள தென்னகத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பதுதான் நமது பெருவிருப்பாகும். மேலும் ஒரு உருக்குத் தொழிற்சாலையை இங்கு ஏன் துவங்கக்கூடாது என்பதற்கு நியாயம் எதுவும் கிடையாது."

என்று, தென்னிந்திய இரும்பு வியாபாரிகள் சங்கத்தின் பொது உறுப்பினர் 14-வது ஆண்டு விழாவில் பேசிய மேற்படி சங்கத் தலைவர் வி. எம். பி. முத்துசாமி, மேற்படி கோரிக்கையை வலியுறுத்தினர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசும்பொழுது கோரியதாவது:-

"இரும்பு உருக்குப் பொருட்களை தென்னிந்தியா மிகுதியாகப் பயன்படுத்தி வருகிறது. அப்பொருட்களை வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதின் மூலம் பெரும் தொகையைப் போக்குவரத்துக் கட்டணமாகச் செலுத்தவேண்டி இருக்கிறது-

"உடனடியாக மேற்கொள்ளுவது முடியாதிருக்குமானலும், கூடியவிரைவில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றை தென்னிந்தியாவில் நிர்மாணிக்கவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ள அதிகாரம் முன்வர வேண்டும்.

"தென்னிந்தியாவில் எதிர்காலத்தில் துவங்கக்கூடிய தொழில்கள் அனைத்தையும் நெய்வேலி ஏற்பாட்டுடன் இணைத்து போடக்கூடாது."

மேற்படி வர்த்தகர்களின் ஆண்டுக் கூட்டம் சென்னை 'கத்தோலிக் சென்டர்' மண்டபத்தில் நடைபெற்றது.

புதிய ஆண்டிற்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மீண்டும் முன்னாள் தலைவர் வி. எம். பி. முத்துசாமி அவர்களே இந்த ஆண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வேலையிழக்கும் தொழிலாளருக்கு நஷ்டஈடு வழங்கச் சட்டம்

இந்தியப் பேரரசு அமுல் செய்யும்

இந்திய உயர்நீதி மன்றத் தீர்ப்பின் எதிரொலி

ஆமதாபாத், ஏப். 24—

"நியாயமான காரணங்களுக்கு உட்பட்டு தொழில் நிறுவனங்கள் தொழிலை நிறுத்திக் கொண்டால், வேலையிழந்த தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டிய அவசியம் இல்லை"

என்று, சமீபத்தில் நடைபெற்ற ஒரு வழக்கில் இந்திய உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இப்போது மத்திய அரசாங்கம், "ஆலை முதலிய தொழில் நிறுவனங்கள் பொருளாதாரக் காரணங்களுக்கு உட்பட்டு மூடப்படும் போது, அதன் காரணமாக வேலை இழந்த ஊழியர்களுக்குக் கண்டிப்பாக நஷ்டஈடு தரவேண்டும்" என்று ஒரு புதிய சட்டத்தை அமுல் செய்ய முடிவு செய்துள்ளதாம்.

ஆமதாபாத்தில் இரண்டு ஆலைகள், பொருளாதார காரணங்களைக் காட்டி, 'ஆலைகள் மூடப்படும்' என்று அறிவித்துள்ளனவாம்!

'கங்கையில் பாலம் கட்ட கோடிக் கணக்கில் பணம் செலவழிக்கிறீர்கள்'

'ஆனால் தென்னாட்டில் தொழில் வளத்தைப்பெருக்க ஏன்முன்வரவில்லை?'

'மக்கள்சபையில் கேள்விக்குரல் எழுப்பித் தீருவோம்'

'தமிழகத்தின் வளத்தைப் பயன்படுத்தாத நிலையை எதிர்த்துப் போராடுவோம்'

ஈ. வெ. கி. சம்பத் முன்னறிவிப்பு

மதுரை, ஏப். 25—

"ஏக இந்தியா என்றும், 'பாரதம்' என்றும், கூறுகிறார்களே, அந்தப் பாரதத்தின் ஒரு பகுதியான தென்னாடு ஐந்தாண்டுத் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டது ஏன்?—என்ற கேள்வியை மக்கள் சபையில் தி. மு. கழகம் எழுப்பும்.

"தென்னாட்டில் உள்ள சத்திமங்கலம் என்னுமிடத்தில் ஏராளமாக இரும்பு கிடைக்கிறது; அந்த வளத்தைப் பயன்படுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்காதது ஏன்?—என்றுதான் தி. மு. கழகத்தினர் அந்த மன்றத்தில் கேட்பர்.

"கங்கையில் பாலம் கட்டுவதற்குக் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்படும்போது, தென்னாட்டில் தொழில் வளத்தைப் பெருக்க ஏன் முயற்சி செய்யவில்லை?—என்ற தி. மு. கழகத்தின் குரல், மக்கள் சபையில் எழுப்பப்படும்"

என்று, மதுரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் முழக்கமிட்டார்.

மதுரை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் திலகர் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நகராசபை உறுப்பினர் தோழர் எஸ். முத்து அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரளான மக்கள் வந்திருந்தனர்.

தொடர்ந்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கூறியதாவது:—

"தி. மு. கழகச் சார்பில் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இருவரால் என்ன செய்யமுடியும் என்று யாராவது கேட்கலாம்; அவர்களுக்கு நான் சொல்லப்போகும் பதில் இதுதான்:—

"தமிழகத்தின் முக்கியமான தீர்மானத்தை நான் மக்கள் சபையில் முன்மொழிவேன்; மற்றொரு உறுப்பினர் அதை வழிமொழிந்து பேசுவார். மற்றவர்கள் அத்தீர்மானத்தை ஆதரிக்கிறார்களா, எதிர்க்கிறார்களா என்பது அல்ல எங்கள் கவலை. நாங்கள், எங்களுடைய கோரிக்கையை மக்கள் சபையில் உரத்தக் குரலில் எழுப்புவோம்"

(4-ம் பக்கம் பார்க்க)

விசித்திரமேவிசித்திரம்

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணிகளை திரும்பவும் ஏற்றுமதிசெய்வதற்கு இந்திய அரசாங்கம் சம்மதித்துள்ளதாகத் தெரியவருகிறது.

மாநிலப் புனரமைப்புக் கிளர்ச்சியின் எதிரொலி

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி

பம்பாய், ஏப். 24—

புதிய மாநில அமைப்பின் போது நடைபெற்ற கிளர்ச்சிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவியளிப்பதற்கு பம்பாய் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம்.

வேறு வழியின்றி அல்லலுறும் குடும்பங்களுக்கு ரூ. 2,000 மானியமாக அளிக்கப்படுமாம்.

மீண்டும் புனர்வாழ்வு பெற விரும்புவோர் மனுக்களைப் பரிசீலனை செய்தபின் ரூ. 25,000 வரை கடனுதவி தரப்படுமாம். இத்தொகைக்கு முதல் ஆண்டிற்கு வட்டி வசூலிக்கப்படமாட்டாதாம்; அதற்கு அடுத்த ஆண்டிலிருந்து 4 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுமாம். கடனை 7 முதல் 10 ஆண்டுக்காலத் தவணைகளில் திருப்பித் தந்துவிட வேண்டுமாம்.

மொத்தத்தில் மனுதாரர்களின் அசையாப் பொருள்களின்மீது தான் கடன் தரப்படுமாம்.

கிளர்ச்சிக்காரர்களால் பொருள் நஷ்டமடைந்தவர்களுக்கும், குடும்பத்தின் ஆதரவாளர்களை இழந்தவர்களுக்கும், அங்கவீனமடைந்த குடும்ப ஆதரவாளர்களுக்கும் உதவிகள் கிடைக்குமாம்; ஆனால், போலீஸ் நடவடிக்கையால் பாதகமடைந்தவர்களுக்கு இந்த உதவி கிடையாதாம்.

நான்காவது உருக்குத் தொழிற்சாலை வடநாட்டிலேயே அமைகிறது!

இந்தியப் பேரரசு தீர்மானித்துவிட்டது

ரெய்ப்பூர், ஏப். 24—

ஏற்படுத்தப்பட்டவிருக்கும் நான்காவது உருக்குத் தொழிற்சாலையை பிகார் மாநிலத்தைச் சேர்ந்த போகாரோவில் ஏற்படுத்துவதென்று இந்திய அரசாங்கம் முடிவு செய்துவிட்டதாம்!

இதற்கான ஏற்பாடுகள் அங்கு செய்யப்படுவதாக மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்துள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 25—4—57 வியாழன்

உத்திரப் பிரதேசத்தார் உள்ளக்கிடக்கை!

“தங்களுக்குத் தேவையான பயன்படு பொருட்கள் அனைத்தையும் விவசாயத்தின் மூலம் மட்டுமே மக்களால் அடைய முடியாது. ஏற்றுமதி எதுவும் செய்யாது இறக்குமதி மட்டுமே செய்துகொண்டு வருமானல், வெறும் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்துவரும் வட்டாரமாக உத்திரப் பிரதேசம் என்றென்றும் பின்தங்கிக் கிடக்கவேண்டியதுதான். உத்திரப் பிரதேசத்தின் பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டுமானல், துணைத் தொழில்களை நிறுவுவதற்கு வாய்ப்பளிக்கக் கூடிய கனரகத் தொழில்களை நிர்மாணித்தாக வேண்டும்”

* * *

இவ்வாறு குமுறி இருப்பது யார் என்று எண்ணுகிறீர்கள்? உத்திரப்பிரதேச முதலமைச்சர் டாக்டர் சம்பூர்ணனந்தர்தான், அதிலும் சட்டசபையில் கதறி இருக்கின்ருர், இப்படி!

கனரகத் தொழில்களைத் துவங்கவேண்டும் என்று, இந்தியப் பேரரசை இம்முதலமைச்சர் வேண்டினராம். அவ்வேண்டுகோளை ஏற்க மறுத்துவிட்டதாம் அப்பேரரசு.

ஆத்திரத்தையும், அழுகையையும் வெளிப்படுத்தும் தொனியில், மேற்குறித்துள்ளவாறு தனது மாநிலத்தின் ‘பிற்போக்கு’த் தன்மை குறித்து, பலப் பல பிரலாபித்திருக்கின்ருர் முதலமைச்சர் டாக்டர் சம்பூர்ணனந்தர்!

தமது மாநிலம் — தம்மை முதலமைச்சராகக் கொண்டிருக்கின்ற நிலப் பரப்பு—உத்திரப் பிரதேசம், வெறும் விவசாய நாடாக இருந்துவருகிறதாம். விவசாயத்தையே நம்பி வாழ்ந்துவரும் பகுதியாக உத்திரப் பிரதேசம் இருந்துவருவதால், அது அழிவு எல்லையை அடைந்துவிட்டிருக்கின்றதாம்!

கனரகத் தொழில் கோரிக்கை உத்திரப் பிரதேசத்தின் வாழ்வு-தாழ்வு பிரச்சினையாம்—உரைக்கின்ருர் அந்தக் கனவான்!

நிலப் பரப்பு விரிபெறக் கூடாதாகையால், விவசாயம் வளர்ச்சி பெறுவது இயலாது; எனவே, பொருளாதார வளமிழந்து உத்திரப் பிரதேசம் ‘பிற்போக்கு’ நிலையில் அமிழ்ந்து கிடப்பதாக உ. பி. முதலமைச்சர் விளக்கிக் காட்டி, கனரகத் தொழில்கள் வேண்டும்—அதன் விளைவாகப் பற்பல துணைத் தொழில்கள் இடம் பெறக்கூடும்—என்ற பரிகாரத்தையும் குறிப்பிட்டு, இந்தியப் பேரரசிற்கு வேண்டுகோள் விடுகிருர்!

கட்சிவேற்றுமைகளை விலக்கிவிட்டு, தமது கோரிக்கைக்கு ஒருமனதாக ஆதரவு காட்டும்படி, சட்டசபையில் இருக்கும் மற்றக் கட்சியினர்களையும் மன்ருடிக் கேட்டுக்கொண்டுள்ளார் அந்தக் கனம்!

மற்றவர்கள், முதலமைச்சரின் கோரிக்கையை ஆதரிக்கத்தானே செய்வர்!

டாக்டர் சம்பூர்ணனந்தர் வெளியிட்டுள்ள வேண்டுகோளையும், அவ்வேண்டுகோளை வெளியிட்டுள்ள தன்மையையும், அதற்காகக் கையாண்ட சொற்களையும், மாற்றுக் கட்சியினரின் ஆதரவு கோரிய போக்கையும், அறிய வரும் எவரும், முதலமைச்சர்மீது இரக்கந்தான் கொள்ளுவர் — அவர் கோரிக்கை மிகமிக நியாயமானது எனக் கருதிடவும் தொடங்குவர்—அதற்கு ஆதரவு காட்டத் தாம் முந்தி தாம் முந்தி எனப் போட்டியிட்டுக்கொண்டு முன்வரவும் வருவர்.

முதலமைச்சர் சம்பூர்ணனந்தர் சுட்டிக்காட்டி இருப்பது போன்று, உத்திரப் பிரதேசம் வெறும் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்துவரும் நிலப்பரப்புதானு? அங்கு குறிப்பிடத்தகுந்தத் தொழில் வளமே கிடையாதா? அப்பிரதேசத்திலிருந்து ஏற்றுமதியாகும் ஆலைப் பொருட்கள் எதுவுமே கிடையாதா? அப்பகுதி ‘பிற்போக்கு’ நிலையில் இருப்பதுதானு? என்பன போன்ற நியாயமான கேள்விகளுக்கு விடை கண்டாகவேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள நியாயமான கேள்விகளுக்கு, நேர்முறை விடை கிடைக்குமானல், டாக்டர் சம்பூர்ணனந்தரின் மனப்பாங்கு எவ்வாறு அமைந்திருக்கிறது--எந்நிலையில் செயல்படுகிறது என்பதையும் நாம் ஆராய்ந்து முடிவு கட்டவேண்டும்.

இவ்வளவும் தெளிவாக உணரப்படுவதற்குமுன், இந்தியப் பேரரசிற்கும் உத்திர பிரதேசத்திற்கும் இருந்துவரும் உறவுமுறை குறித்தும் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியப் பேரரசின் இதயம்—உத்திரப் பிரதேசம். அதாவது இந்தியப் பேரரசில் முழு ஆதிக்கம் செலுத்தி வருவது உத்திரப் பிரதேசமேயாகும். இவ்வாறு குறிப்பிடுவது மிகைபடக் கூறியதாகாது.

உத்திரபிரதேசத்தின் மொழியான இந்தி மொழிதான், அதன் வரை கடந்த விருப்பப்படி, இன்று இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டு இருக்கிறது என்பது ஒப்ப முடிந்த உண்மையாகும்.

மொழித் துறையில், இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் தனிப்பெரும் ஏகாதிபத்தியமாக உத்திரப் பிரதேசம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்பது மறுக்கமுடியாதப் பேருண்மையாகும்.

மொழித் துறையைப் பொறுத்தவரையில், மற்ற பகுதிகளின் மொழிகளுக்கு இல்லாத தனி ஆதிக்கம் உத்திரப் பிரதேசத்திற்கு அளிக்கப்பட்டு இருக்கிறது.

உத்திரப் பிரதேசத்தின் மொழி ஆதிக்கத்தை, அளவு கடந்த மொழிப்பற்று என்ருே, முற்றிப்போன மொழிவெறி என்ருே வெளிப்படையாகக் கூறுவோரும் இல்லை—கொள்ளுவோரும் இல்லை.

உத்திரப் பிரதேசம் நிர்மாணித்துள்ள மொழி ஏகாதிபத்தியத்தை, இந்திய தேசியம் என்றப் பகட்டான பட்டாடை போர்த்தி, மூடி மறைத்துவிடுகின்றனர் அரசியல் எத்தர்கள். எனவே அந்த மொழி ஏகாதிபத்தியத்தின் பயங்கர உள்ளடக்கத்தைப் பெரும்பான்மையினரால் விளக்கமாகத் தெரிந்துகொள்வது இயலாது போகிறது.

மொழித்துறையில், உத்திரப் பிரதேசம், இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு பலம் பொருந்திய மொழி ஏகாதிபத்தியமாக ஏற்றம் பெற்று விளங்குகிறது என்பது நடைமுறை வரலாற்று உண்மையாகும்.

இந்தியத் துணைக் கண்ட அரசியலில் உத்திரப் பிரதேசம் பெற்றுள்ள இந்த ஏற்றம், டாக்டர் சம்பூர்ணனந்தருக்கு ஆறுதல் அளிப்பதாகவுமில்லை—மகிழ்ச்சி தருவதாகவுமில்லை-மன நிறைவு ஏற்படுத்துவதாகவுமில்லை. மேலும் அவர் மனம் ஆதிக்கத்தைத் தேடி அலைகிறது!

மனநோயைத் தடுக்க அரிய முயற்சி

ரூ. 85 இலட்சம் உதவி

ஜெனிவா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஐன்ஸ்டீன் மருத்துவக் கல்லூரிக்கு அமெரிக்கப் பொது சுகாதார இலாகாவிடமிருந்து 17 இலட்சம் (டாலர் ரூ. 85 இலட்சம் நன்கொடை கிடைத்துள்ளதாம்.

மன வள ஆராய்ச்சிக்கான 6 வருடத் திட்டத்திற்கு இந்தத் தொகை தரப்பட்டுள்ளதாம்.

மனநோயின் காரணங்களைப் பற்றியும், அதனைத் தடுப்பதற்கும் மாற்றுவதற்கும் அவசியமான செய்கையைப் பற்றியும், மனிதனின் அறிவை அதிகரிக்கவும் ஒரு பெரும் முயற்சியாக இந்தத் திட்டம் அமைந்துள்ளதாம்.

‘மனித சமுதாயமே அழிந்துவிடும்’

‘நோபல்’ பரிசு பெற்ற விஞ்ஞானி எச்சரிக்கை

ஆஸ்லோ, ஏப். 23—

“அணு ஆயுதங்களை வெடிக்க வைத்துச் சோதனைகள் நடத்துவதால் உலகில் கதிரியக்கம் பரவி மனித சமுதாயத்தையே அழித்துவிடும்”

என்று, நார்வே நாட்டைச் சேர்ந்த தத்துவ நிபுணர் டாக்டர் ஆல்பர்ட் ஸ்விட்ஜர் எச்சரித்துள்ளார்.

அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்துமாறு மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இவர் நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

‘சிதைந்து சீரழியும்’

‘அமைதியின்மையே அறிகுறியாகும்’

நியூயார்க், ஏப். 23—

“ரஷ்ய ஆட்சி இறுதியில் சீரழிந்துவிடும்” என்று, முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி கருத்தறிவித்திருக்கிருர்.

“சமீபத்தில் அங்கேரியில் நடைபெற்ற கலகங்களும், ரஷ்ய இளைஞர்களுக்கிடையே காணப்படும் அமைதியின்மையையும் கம்யூனிசம் சிதைந்துபோவதின் அறிகுறிகளாகும்” என்றும், ஆனல் மற்றவர்கள், சிறிது பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நெய்வேலியில் உரத் தொழிற்சாலை

விவசாயிகளுக்குப் பயனளிக்கும் ‘யூரியா’ உற்பத்தியாகும்

புதுடில்லி, ஏப். 24—

நெய்வேலியில் ஏற்படுத்தப்படவிருக்கும் இரசாயன உரத் தொழிற்சாலை ஆண்டிற்கு 70000 டன் நைட்ரஜன் கலப்புள்ள யூரியாவை உற்பத்தி செய்யக் கூடியபடி திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டு வருகிறது.

இத்தொழிற்சாலை உத்பத்தியில் இறங்கும்போது உலகத்திலுள்ள மிகப் பெரிய யூரியா தயாரிப்பு சாலைகளில் ஒன்ருக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகள் இந்த ரக உரத்தைப் பெரிதும் விரும்பி வாங்குகின்றனர். இதைக் குறைந்த விலையில் தயாரித்து வினியோகம் செய்யமுடியும். அது சீக்கிரம் கெட்டுப் போகாததாகவும் இருக்கிறது.

1960 ஜூலை அல்லது ஆகஸ்டு துவக்கத்தில் இத்தொழிற்காலை, வேலையைத் துவங்கிவிடும்; அதற்குள் பழுப்பு நிலக்கரி உற்பத்தியும் வர்த்தக ரீதியில் ஆரம்பித்துவிடும். நெய்வேலியில் ஏற்படுத்தப்படும் மின்சார நிலைய வசதியை இதற்குப் பயன்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டின் ‘கருப்புத் தங்கம்’

பலன் பற்றி விளக்கம்

சென்னை, ஏப். 24—

நெய்வேலியில் அமைக்கும் மின்சார உற்பத்திச்சாலை 1960-ல் கட்டி முடிக்கப்பட்டு உற்பத்தி ஆரம்பமாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்!

நெய்வேலியில் கிடைக்கும் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி, இந்த மின்சார உற்பத்தித் தேவைக்குப் போக மற்ற வேலைகளுக்கு 300 ஆண்டுகளுக்குப் போதுமானதாக இருக்குமாம்!

இந்த மின்சார உற்பத்திச்சாலை உருவாகி உற்பத்தி ஆரம்பமானல் தென்னாட்டில் மின்சார வசதி அதிகரிக்குமென்றும், கைத்தொழில்கள் முன்னேற்றமடையுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

அணுக்கதிர் இயக்கத்தால் விளையும் ஆபத்து

பிறக்கும் குழந்தைகளையும் பாதிக்குமென எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப். 24—

அணுக் கதிரியக்கத்தால் பெற்ருேர்கள் பாதிக்கப்பட்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் ஆயுட்காலம் குறைந்துவிடுமென்பதற்கான புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் அறிவித்துள்ளார்.

எலிகள்மீது பரிசோதனை நடத்தி இந்த முடிவுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்களுக்கு உபகாரச் சம்பளம்

தொழிற் கட்சி திட்டம் வகுக்கும்

லண்டன், ஏப். 24—

வேலையிலிருந்து தொழிலாளர்கள் ஓய்வுபெற்றதும், அவர்களின் ஊதியத்தில் பாதித் தொகையை உபகாரச் சம்பளமாக அளிக்க வேண்டுமென்ற ஒரு தேசீயத் திட்டத்தைப் பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் பணம் பங்கு முறையில் சேர்க்கப்படுமாம்.

காகித உற்பத்தித் தொழிற்சாலை

மத்தியப் பிரதேசத்திலேயே ஆரம்பமாகிறது

போபால், ஏப். 23—

தினசரி 100 டன் காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையொன்று மத்தியப் பிரதேச மாநிலத்திலுள்ள ரீவா பகுதியில் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

1959-ம் ஆண்டு முதல் உற்பத்தி துவங்குமாம்.

1,473 சதுரமைலும், 205 ஏக்கரும் உள்ள மூங்கில் விளையும் காடுகளையும் ஒரு காகித உற்பத்தி நிறுவனத்திற்கு 20 ஆண்டுக் காலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாம்.

கடன் வாங்கிய வெள்ளி கப்பலேறுகிறது!

நாலணு வெள்ளி நாணயங்கள் அமெரிக்கா செல்லுகிறது

புதுடில்லி, ஏப். 22—

இரண்டாவது உலக யுத்தத்தின்போது, அமெரிக்கா ‘இரவல்—குத்தகை’த் திட்டத்தின்கீழ் இந்திய சர்க்காருக்கு 22 கோடி 60 இலட்சம் அவுன்ஸ் வெள்ளியை கடனகத் தந்திருந்தது. போர் முடிந்தபின் 5 ஆண்டுகளுக்குப் பிறகு வெள்ளியைத் திருப்பித் தரவேண்டுமென்பது ஏற்பாடாகும். இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு இந்தியாவின் பங்கு 17 கோடி 20 இலட்சம் அவுன்ஸ் என நிர்ணயிக்கப்பட்டிருந்த வெள்ளியைத் திருப்பித் தருவதென இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

5 கோடி அவுன்ஸ் வெள்ளிக் கட்டிகளாகவும், பாக்கியுள்ளவற்றை பழைய வெள்ளி நாலணு நாணயங்களாகவும் தரப்படுமாம்.

பழைய வெள்ளி நாலணுவில் 50 சதவிகிதம் வெள்ளியும், செம்பு 40 சதவிகிதமும், துத்தநாகம் 5 சதவிகிதமும், நிக்கல் 5 சதவிகிதமும் இருக்கிறதாம்.

நாலணு நாணயத்திலுள்ள வெள்ளியை உருக்கி எடுத்துக் கொள்வதற்காகும் செலவையும் கப்பல் கட்டணத்தையும் அமெரிக்கா ஏற்றுக்கொள்ளுமாம்.

இலட்சணமே இலட்சணம்!

சென்னை, ஏப். 24—

1956-ம் ஆண்டு நவம்பர் முதல் எல்லாப் பயிற்சி பெற்ற—பெருத ஆசிரியர்களுக்கும் இடைக்கால ஊதிய உயர்வு தருவதற்கு மற்றவர்களுடன் உத்திரவிடப்பட்டதாம். ஆனல், அந்தச் சம்பள உயர்வு இதுவரையில் தரப்படவில்லையாம்!

பல புகார்கள் கிடைத்ததின் மீது, சம்பள உயர்வு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிட்டு பாக்கியைத் தருவதற்கான மற்ருெரு உத்தரவை விரைவில் பிறப்பிக்கும் யோசனையில் சென்னை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

சென்னை நகர சபையின் முன்னேற்றம்

உறுப்பினர்களுடன் தமிழிலேயே கடிதப் போக்கு-வரத்து

சென்னை அரசாங்கம் தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்கியுள்ளதை யொட்டி சென்னை நகரசபையும் செயல்பட முனைந்திருக்கிறது.

இனி நகரசபை உறுப்பினர்களுடன் சம்பந்தப்பட்ட இலாகாவினர் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து நடத்துவார்கள் என்று தெரியவருகிறது.

இதற்கான உத்தரவுகளை நகரசபை ஆணையாளர் பல்வேறு இலாகாத் தலைவர்களுக்கும் பிறப்பித்துள்ளார் என்றும் தெரியவருகிறது.

தேர்தலுக்குப் பின் புதியதோர் சக்தி!

பட்டிதொட்டியெங்கும் பிறந்திருக்கிறது

தி. மு. கழக இலட்சியக்குரல் நாடெங்கும் ஒலிக்கிறது

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆய்வுரை

சேலம், ஏப். 22—

சேலம் அம்மாப்பேட்டை காந்தியார் திடலில் 21-4-57 மாலே, தோழர் பி. ரங்கசாமி தலைமையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் ஏ. மாரியப்பன் எம். சி., அணுகுண்டு எஸ். ஆறுமுகம், இ. ஆர். கிருட்டிணன், வி. சிவப்பிரகாசம், கே. ஆர். மாசிலாமணி ஆகியோர் எவ்வாறு தி. மு. கழகம் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வருகிறது என்று விவரமாக எடுத்துக் கூறினர்.

தி.மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் பேசுகையில் சொன்னதாவது :-

"தேர்தலுக்குப்பிறகு தி. மு. கழகம் புதியதொரு சக்தியைப் பெற்றிருக்கிறது. இதற்குச் சான்முக நாடெங்கிலும் பட்டிதொட்டிகளிலும் தி. மு. கழகக் கூட்டங்கள் நடந்தவண்ணமிருக்கின்றன. மக்கள் தி. மு. கழகக் கூட்டங்களுக்கு நிறைய ஆதரவு தருகிறுர்கள். தேர்தலில் தி. மு. கழகம் 15 இடங்களேயே கைப்பற்றியது. பல பகுதிகளில் தி. மு. கழக அபேட்சகர்கள் தோல்வியடைந்தார்கள். தி. மு. கழக அபேட்சகர்கள் தோல்வி அடைந்த பகுதிகளில் எல்லாம் தி. மு. கழக அபேட்சகர்களுக்கு ஏராளமான மாலேகள் போட்டு உற்சாகமான வரவேற்பை மக்கள் அளித்தனர். அதைப் பார்க்கும்பொழுது தேர்தலில் தோல்வி அடைந்த தி. மு. கழக அபேட்சகர்களுக்கு, 'நாம் தானு தோல்வியுற்ருேம்?' என ஐயப்பாடு தோன்றுகிறது. தேர்தலில் பல பகுதிகளில் தி. மு. கழக அபேட்சகர்கள் தோல்வியடைந்தாலும் அப்பகுதிகளில் பண்பு வெற்றி பெற்றிருக்கிறது. தேர்தலுக்கு முன்பு தி. மு. கழகம் எந்தப் பணியை செய்து வந்ததோ, அதே பணியை தொடர்ந்து இனியும் செய்யும்.

"தி. மு. கழகத்தை, தேர்தலில் தி. க., காங்கிரஸ், பிரஜா - சோசலிஸ்டு, சோசலிஸ்டு, கம்யூனிஸ்டு, தமிழரசுக் கழகம் ஆகியவைகள் எதிர்த்தன; எல்லா எதிர்ப்புகளேயும் சமாளித்து 15 - இடங்களே தி. மு. கழகம் கைப்பற்றியிருக்கிறது என்ருல், இது வெற்றியாகாதா?

"தேர்தல் சமயத்தில் சென்னே முதன் மந்திரி காமராசர் ஓட்டுச் சாவடிகளுக்கு ஏன் செல்ல வேண்டும்? மந்திரிக்கு ஓட்டுச் சாவடியில் என்ன வேலே? ஆகவே, காமராசர் மனதறிய தன் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்துவிட்டார் எனக் குற்றம் சாட்டுகிறேன்.

"தமிழ் நாட்டில் எல்லாத் தொகுதிகளிலும் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு சுமார் ரூ. 300 இலட்சம் செலவு செய்ததாக காங்கிரஸ் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

"தேர்தலுக்காகத் தி. மு. கழகம் திரட்டிய நிதி—மக்கள் தேர்தலின்போது கொடுத்த நன்கொடை முதலியவைகளே எல்லாம் சேர்த்து—மொத்தம் சுமார் ரூ. 2 இலட்சம்தான் தமிழ் நாட்டில் தி. மு. கழக அபேட்சகர்கள் அனைவருக்கும் தேர்தல் செலவு செய்யப்பட்டது.

"ரூ. 300 இலட்சம் செலவு செய்து காங்கிரஸ் கைப்பற்றிய இடங்கள் 151; சுமார் ரூ. 2 இலட்சம் செலவு செய்து தி. மு. கழகம் பெற்ற இடங்கள் 15! இதில் எது வெற்றியாகும்? காங்கிரஸ்காரர்கள் பணத்தைக்கொண்டு வெற்றி பெற்ருர்கள்! தி. மு. கழகமோ பண்பைக்கொண்டு வெற்றி பெற்றது!

"காமராசர், முன்பு, குடியாத்தம் உபதேர்தலில் சுமார் 20,000 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ருர்; ஆனல், இந்தத் தேர்தலில் அவர் சுமார் 4,500 ஓட்டுகள் வித்தியாசத்தில் தான் வெற்றி பெற்றிருக்கிறார். இதைப் பார்க்கும்பொழுது காமராசரின் செல்வாக்கு முன்பு இருந்ததை விட இப்பொழுது குறைந்து இருக்கிறது என்பது தெளிவாகிறது. இதைப் பார்க்கும்போது அடுத்த தடவை மீண்டும் காமராசர் முதன்மந்திரியாக வருவாரா என்பது ஐயப்பாடாக உள்ளது.

"திராவிட கழகத் தலைவர் பெரியார், 1949-ல் தன் கொள்கைகளே சிதறடித்து விட்டார். 1957-ல் பெரியாரின் கொள்கை முற்றிலும் மாறிவிட்டது. எந்தக் கொள்கைகளுக்காகப் பெரியார் முன்பு பாடுபட்டாரோ, அந்தக் கொள்கைகளே பெரியார் கைவிட்டுவிட்டார். ஆகையால் முன்பு பெரியார் கூறிய கொள்கைகளே காப்பாற்ற விரும்பும் தி. க. தோழர்கள், தி. மு. கழகத்தில் சேர்ந்தால் அவற்றைநிறைவேற்ற முடியும். ஆகவே, வாருங்கள்! வாருங்கள்!' என்று தி. க.-வினரை தி. மு. கழகத்தில் சேருமாறு அழைப்புவிடுக்கிறேன்.

"வருங்காலத்தில் தி. மு. கழகம் வளர்ந்து பலம் பொருந்தியதாக விளங்கப்போகிறது. உண்மையான காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்து நல்ல முறையில் பணியாற்ற முடியாது. ஆகவே, காங்கிரஸ்காரர்களேயும் தி. மு. க.-வில் சேருமாறு அழைக்கிறேன்.

தேர்தலுக்குப்பின் தமிழ்நாட்டில் சுமார் 2,500 புதிய உறுப்பினர்கள் தி. மு. கழகத்தில் சேர்ந்துள்ளனர்; 35 கிளேக் கழகங்கள் திறக்கப்பட்டுள்ளன; மேலும் பல கிளே கழகங்கள் திறக்க ஏற்பாடாகி வருகின்றன. மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் தி. மு. கழகத்தில் சேர்ந்து கொண்டிருக்கிறுர்கள்.

"தி. க.-வைச் சேர்ந்த 150 பேர், இதுவரையில் தி. க.-வில் இருந்து விலகி தி. மு. க.-வில் சேர்ந்து இருக்கிறுர்கள்; ஆத்தூர் தாலுகாவில் திராவிட கழகமே இல்லே! இந்த அளவுக்கு மாற்றம் ஏற்பட தேர்தலில் தி. க. கையாண்ட கொள்கைதான் காரணம்.

"1956-ல், தேவிகுளம், பீர்மேடு பிரச்சினேக்காக சர்வகட்சிப் போராட்டத்தில் தி. மு. கழகமும் பங்கு கொண்டது. அந்த சர்வகட்சிக் கூட்டணியைத் தேர்தலுக்கும் பயன்படுத்தவேண்டும் என்று அண்ணு அவர்கள் விருப்பம் தெரிவித்தார்கள். உடனே மற்றக் கட்சிக்காரர்கள் தேர்தலுக்கு அந்தக் கூட்டணியைப் பயன்படுத்துவது பற்றி அண்ணு எப்படி சொல்ல முடியும் என்று கேட்டார்கள். உடனே அந்த முயற்சியைக் கைவிட்டார். அதனல் தேர்தல் சமயத்தில் எந்தக் கட்சியுடனும் கூட்டு சேராமல் தன்னந்தனியாகப் போட்டியிட அண்ணு முடிவு செய்தார்.

"ஆகவே, தேர்தலில் கூட்டு சேராததற்கு எங்கள் மீது தவறு சொல்லிப் பயனில்லே. அடுத்த தேர்தலில் வேண்டுமானல் தேர்தல் கூட்டு சேர்ந்து காங்கிரசை முறியடிப்பதைப் பற்றி யோசிப்போம்.

"இந்தத் தேர்தலில் மற்றக் கட்சிகளுடன் தி. மு. க. தேர்தல் கூட்டு சேராவிடினும், கூடுமான வரை காங்கிரசை தோற்கடிக்க சில இடங்களில் தி. மு. க. விட்டுக்கொடுத்து இருக்கிறது.

"இப்பொழுது கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி மந்திரி சபை ஏற்பட்டுள்ளது. கம்யூனிஸ்டு சர்க்காரின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியப் பேரரசு தலையிடுகிறது.

"மாநில சர்க்காரின் உள்நாட்டு விவகாரங்களில் மத்தியப் பேரரசு தலையிடுவதைத்தான் நாங்கள் வேண்டாம் என்று சொல்கிருேம். இதில் என்ன தவறு? அதற்காகத்தான் திராவிட நாடு கேட்கிருேம்.

"கேரள சர்க்காருக்கும், மத்தியப் பேரரசுக்கும் மோதுதல் ஏற்பட்டால், நிச்சயம் தி. மு. கழகம் கேரள சர்க்காருக்கு பக்கபலமாக இருந்து உதவிசெய்யும்." (ந.நி.)

சேவூர் தி. மு. கழக செயலாளர்

ஊராண்மைக் கழக உறுப்பினராகத் தேர்வு

23—4—57 காலே 9 மணிக்கு மாவட்ட நடுநிலேத் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற சேவூர் (ஆரணி - வ. ஆ.) ஊராண்மைக் கழக மறு தேர்தலில், சேவூர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் வி. இ. செயராமன் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முன்னுள் உறுப்பினர் தோழர் என். எஸ். பத்திரபாகு நைனுர் இயற்கை யெய்திவிட்டார். அதனல் ஆரணி - உதவி பஞ்சாயத்து அதிகாரியை தேர்தல் அதிகாரியாகக் கொண்டு மறுதேர்தல் நடைபெற்றது.

ஏற்கனவே இவ்வூராண்மைக் கழகத்தில் கழகத் தோழர்களான டி. வேதகிரி, ஆர். மோசை ஆகியோர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

குடியரசு தலைவர் தேர்தல்

சென்னையில் வாக்குப் பதிவு நடைபெறுமாம்

சென்னை, ஏப். 24—

மே மாதம் 6-ந் தேதி நடைபெறவிருக்கும் இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தல், சென்னை கோட்டையில் உள்ள மேல்சபை செயலாளர் அறையில் வாக்குப் பதிவு நடைபெறுமாம்.

சென்னை மாநிலத்தினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மக்கள் சபை, சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் வாக்குப் பதிவு செய்ய உரிமை இருக்கிறது.

தாமோதர் பள்ளத்தாக்கு திட்ட மின்சாரம்

கல்கத்தாவுக்கு 20,000 கிலோவாட் கிடைத்துவிட்டதாம்

கல்கத்தா, ஏப். 22—

தாமோதர் பள்ளத்தாக்கு திட்டத்தின்கீழ் உற்பத்தியாகும் மின்சாரம், பர்ன்பூரில் உள்ள இரும்பு—எஃகுத் தொழிற்சாலேக்கும், சித்தரஞ்சன் இரயில் இயந்திர உற்பத்தித் தொழிற்சாலேக்கும் இதுவரை அளிக்கப்பட்டுள்ளது.

இப்போது கல்கத்தா மின்சார நிறுவனத்திற்கும் 20,000 கிலோவாட் மின்சாரம் அளிக்கப்பப்பட்டுள்ளது. 1960-ல் மொத்தம் 95,000 கிலோவாட் மின்சாரம் கல்கத்தாவுக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

'கட்டபொம்மன்' நினைவுச் சின்னம்

ஏற்படுத்துமாறு இந்திய பேரரசுக்கு வேண்டுகோள்

தூத்துக்குடி நகரசபையின் கோரிக்கை ஏற்கப்படுமா?

1957-ம் ஆண்டில் இந்தியச் சுதந்திரப் போராட்ட நூற்றுண்டு விழாவாக கொண்டாடுகையில், பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடிய வீரபாண்டிய கட்டபொம்மனின் சரித்திரத்தை வெளியிடும்படியும், அவ்வீரனுக்கு ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்துமாறும் மத்திய அரசாங்கத்தை கேட்டுக்கொண்டு தூத்துக்குடி நகரசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

'திருக்குடந்தை' என்று பெயர் மாற்றம்

குடந்தை நகரசபை முடிவு

குடந்தை, எப். 23—

'கும்பகோணம்' என்ற பெயர் பலவிதங்களில் பொருள்படுத்தப் படுவதால் 'கும்பகோணம்' என்ற பெயரை 'திருக்குடந்தை' என்று மாற்றுவதென நகரசபை முடிவு செய்திருக்கிறது.

குடந்தையில் தானியக் கிடங்கு கட்ட முடிவு

குடந்தை, எப். 23—

உணவுத் தானியங்களேச் சேகரித்துவைக்க ஒரு பெரிய கிடங்கு குடந்தையில் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளதாம். இங்கு 25,000 டன் நெல் குவித்துவைக்க வசதியிருக்குமாம்.

மற்ற பகுதிகளில் 9 கிடங்குகள் பின்னர் அமைக்கப்படுமாம்.

தூத்துக்குடி துறைமுகம் அபிவிருத்தியாகுமா?

தூத்துக்குடி துறைமுகத்தை ஆழப்படுத்தி அதை அபிவிருத்தி செய்யும் வேலேகளே உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு, தூத்துக்குடி நகரசபை ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

சென்னையில் பௌத்த கலேக் கண்காட்சி

14 நாடுகள் கலந்து கொள்ளும்

சென்னை, எப். 24—

2,500-வது புத்த ஜெயந்தி விழா செயற்குழு, லலித கலே அகடமிமூலம்ஏற்பாடுசெய்துள்ள பௌத்த கலேக் கண்காட்சி சென்னையில் ராஜாஜி மண்டபத்தில்இம்மாத இறுதியில் நடைபெறும்; 12 நாட்கள் நீடிக்கும்.

இக்கண் காட்சியில், பல நூற்ருண்டுகளாக பௌத்தத்தினல் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி அம்சங்களே எடுத்துக் காட்டும் பொருள்களெல்லாம் இருக்கும்.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல பொருட்காட்சி சாலேகளிலிருந்து சேகரிக்கப் பட்ட 1000-க்கு மேற்பட்ட காட்சிப் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

பின்வரும் நாடுகள் இதில் பங்கு கொள்ளுகின்றன; சீன மக்கள் குடியரசு, வியட்நாம், தாய்லாந்து, கொழும்பு, கம்போடியா, பிரான்ஸ், இங்கிலாந்து, நெதர்லாந்து, அமெரிக்கா, இந்தோனேஷியா, ஹங்கேரி, பூடான், சிக்கிம்.

கொரிய மகாபோதி சங்கம் சேகரித்துள்ள பொருள்களும் காட்சியிலிருக்கும்.

இந்தக் காட்சிப் பொருள்கள் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள பல்வேறு இனங்களேச் சேர்ந்த—பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் கருத்துக்களின்படி உருவானவையாகும்.

நன்றி அறிவிப்பு

கன்னியாகுமரி சட்ட சபைத் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகைப் போட்டியிட்ட என்னை ஆதரித்த கழகத் தோழர்களுக்கும், அனுதாபிகளுக்கும், ஆதரவாளர்களுக்கும், அல்லும் பகலும் அயராது உழைத்த நண்பர்களுக்கும் பொதுமக்களுக்கும் தாய்மார்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் சொள்கிறேன்.

நம் தோல்வியைப் பற்றிக் கவலே கொள்ளாமல் மேலும் நடக்கவேண்டிய கழக வேலேயில் ஈடுபட்டு புதிய கிளேக் கழகங்களே துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்
ந. குமாரசுவாமி

நன்கொடை உள்ளம்!

சேலம் கலெக்டர் பாராட்டு

சேலம், எப்! 22—

சேலம் நகராண்மைக் கழகத்தைச் சேர்ந்த அம்மாப்பேட்டை மருத்துவமனையில் திரு. ப. மாரியப்ப முதலியாரால் நன்கொடையாகக் கட்டிக் கொடுக்க இருக்கும் பிரசவ விடுதிக் கட்டடத்திற்கு சேலம் மாவட்டக் கலெக்டர் எம். ஜி. பாலசுப்பிரமணியம் 21-ந் தேதியன்று கால்கோள் விழாவாற்றினர்.

சில நாட்களுக்கு முன் சேலத்தில் தொழிற் கல்வி பள்ளிக் கூடம் நிறுவ சேலம் பி. எஸ். வி. ராமானுசம் செட்டியார் ரூ. 1½ இலட்சம் நன்கொடை கொடுத்ததைப் பாராட்டியும் கலெக்டர் பேசினர்.

சேலம் நகராண்மைக் கழகத் தலைவர் பி. மதுரைப்பிள்ளே நகராண்மைக் கழகச் சார்பில் ப. மாரியப்ப முதலியாருக்கு வரவேற்பு இதழ் ஒன்றை வாசித்து அளித்தார். நகராண்மை ஆணையாளர் குஞ்சிதசாணம் எல்லோரையும் வரவேற்றுப் பேசினர்.

எம். வி. கோபால் செட்டியார், சீத்தாலட்சுமி-ராமசாமி, மற்றும் பலரும் பேசினர். (ந. நி.)

இரு பத்திரிகைகள்மீது அதிகாரிகள் பாய்ச்சல்!

ஜகார்த்தா, எப். 23—

'டைமூர்,' 'பெதோமனு' என்னும் இரண்டு பத்திரிகைகள், இராணுவ நடவடிக்கைகளேப் பற்றிய செய்திகளே வெளியிட்டதற்காக இந்தோனேஷியா அவசரச் சட்டத்தின் கீழ் இராணுவ அதிகாரிகள் அப்பத்திரிகைகளின் நிறுவனங்களே மூடிவிட்டனர் என்று தெரிய வருகிறது.

அன்பளிப்புகள்

21—3—57ல், செங்கற்பட்டு மாவட்டம்—பழவேற்காடு தோழியர் பி. சி. சகுந்தலா அம்மையார் ஓர் ஆண் மகவுக்குத் தாயானுர்கள். அம்மகவுக்கு 'மனோகரன்' என்று பெயரிடப்பட்டது; அதன் நினைவாக 'நம் நாடு, வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

சேலம்—மேட்டூர் அணை தோழர் எஸ். வி. டி. கடம் அலர்கள், புத்தாண்டுத் துவக்க விழாவை முன்னிட்டு 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

4—4—57ல், திருமங்கலம் கே. வி. கே. சாமி நினைவு படிப்பகத் துணைச்செயலாளர் தோழர் சோலேயின் துணைவியார் ஓர் ஆண் மகவுக்குத் தாயானுர். குழந்தைக்கு 'உதய சூரியன்' என பெயரிடப்பட்டது; அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

நெல்லிக்குப்பம் மஜீத் மன்றத்தாரால் 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

அரிசிவிநியோகத்தில்நெருக்கடியா?

வேண்டிய அளவுக்கு டில்லி பேராசு உதவி செய்யுமென நம்புகிறோம்!

சென்னை அமைச்சரின் குழப்ப நிலைமை

சென்னை, எப். 24—
ஒவ்வொரு மாவட்டத்திலும் அரிசி இருப்பு நிலவரத்தைப் பற்றிய அறிக்கையை தயாரித்து அனுப்பும்படி மாவட்டக் கலெக்டர்களை சென்னை அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளதாம்.

மேலும், நியாயவிலைக் கடைகளைத் திறப்பது அவசியமா என்பதைப் பற்றியும் முடிவு தெரிவிக்க வேண்டும் என்று, உணவு இலாகாவைக் கவனித்துவரும் அமைச்சர் பக்தவத்சலம், கலெக்டர்களைக் கேட்டுக்கொண்டிருப்பதாக நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

சென்னையின் அரிசி விநியோக நிலைமையைச் சமாளிப்பதற்கு வேண்டிய அளவுக்கு மத்திய அரசாங்கம் வசதி செய்துதரும் என்று தான் நம்புவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

சென்னைக்கு குடிதண்ணீர் விநியோகம் அதிகரிப்பு

சென்னை, எப். 24—
குடிதண்ணீர் விநியோக நிலையத்தில் வடிகட்டும் தண்ணீரைத் தேக்கிவைப்பதற்காக சென்னை நகரசபையால் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு புதிய தண்ணீர் தொட்டிகளில் ஒன்று உபயோகத்திற்கு வந்தது; தண்ணீர் விநியோகக் குழாய்களுடன் இத்தொட்டியை இணைத்து சென்னை மேயர் இயக்கிவைத்துள்ளார்.

இந்தத் தொட்டியில் 20 இலட்சம் காலன் வடிகட்டிய தண்ணீரை இரவில் தேக்கிவைக்க முடியும்.

கடந்த சில வாரங்களாக நகரில் நாள்தோறும் 2,60,00,000 காலன் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது வடிகட்டிய தண்ணீரைத் தேக்கிவைப்பதற்கு வசதி ஏற்பட்டிருப்பதால் நாள்தோறும் தண்ணீர் விநியோகம் அதிகரிக்கக்கூடும்.

புழலேரியில் தற்போது 44·15 அடி உயரத்திற்கு நீர்மட்டம் இருக்கிறது.

கழகத் தோழர்கள் தாக்கப்பட்டதன் விளைவு

பொதுவுடைமையர் இருவர் கைது; ஒருவர் தலைமறைவு

மதுரை, எப். 21—
சென்ற கிழமை மதுரையில் தி. மு. கழகத் தோழர்களான சௌந்திரபாண்டியன், குருசாமி ஆகியோர் கொடிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட செய்தி வெளியானது நினைவிலிருக்கலாம்.

இச்சம்பவத்தையொட்டி பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் செல்லையா, சீனி என்ற இருவர் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் நாச்சியப்பன் எனும் பொதுவுடைமைவாதி தலைமறைவாக இருப்பதாகத் தெரியவருகிறது.

கூட்டுத் தொகுதி முறையே இனி அமுலாகும்

சட்டம் நிறைவேறிவிட்டது

கராச்சி, எப். 24—
பாகிஸ்தானின் இரு பகுதிகளிலும் இனி கூட்டுத் தொகுதி முறைதான் நடைமுறையில் அமுலாகும்.

தகராறுக்குட்பட்டிருந்த இது பற்றிய சர்க்கார் மசோதா பாகிஸ்தான் தேசிய சபையில் (பார்லிமெண்டு) நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்திற்கு நேரில் வர உத்தரவு

எதிரிகளின் கோரிக்கை நிராகரிப்பு

டால்மியா மோசடி வழக்கில் நீதிபதி உத்தரவு

புதுடில்லி, எப். 24—
சேத் இராமகிருஷ்ண டால்மியா, மற்றும் எட்டுபேர் மீது ரூ. 2,85,00,000 மோசடி செய்துள்ளதாக தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணை மீண்டும் மே. 3-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையை 6 மாத காலத்திற்குத் தள்ளி வைக்க வேண்டும் என்ற எதிரிகளின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

அடுத்த விசாரணையன்று, சேத் டால்மியா அவசியம் நீதிமன்றத்திற்கு வந்திருந்து, விசாரணைக்கு தயாராக இருக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

5-ஆண்டுகள் தவணை பாக். கோருகிறது

அமெரிக்காவுக்குத் தரவேண்டிய வெள்ளிக் கடன் பற்றி தகவல்

கராச்சி, எப். 24—
அமெரிக்காவுக்குத் திருப்பித் தரவேண்டிய வெள்ளிக் கடன் 5 கோடி 30 இலட்சம் அவுன்ச என்பதை பாகிஸ்தான் ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆனால் இதைத் திருப்பித் தருவதற்கு மேலும் 5 ஆண்டு காலம் தவணை வேண்டுமென பாகிஸ்தான் கேட்டுக்கொண்டுள்ளதாகச் செய்தி ஒன்று வெளியாகியிருக்கிறது.

ஆனால், அதே நிலவரத்தின்கீழ் இந்தியாவின் நிலைபற்றிய செய்தியின் சாரம் 2-வது பக்கத்தில் வெளியாகியிருப்பதை வாசகத் தோழர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

இராணுவ நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலை இருப்பதாகத் தோன்றவில்லையாம்!

காஷ்மீர் சிக்கல்பற்றி பாகிஸ்தான் பிரதமர்

டோக்கியோ, எப். 24—
"காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாமீது பாகிஸ்தான் இராணுவ நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை" என்று பாகிஸ்தான் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் தகராறு பற்றி அவர் குறிப்பிடுகையில், இச்சிக்கலைத் தீர்க்க ஐ. நா.-வே சிறந்த சாதனம் என்றும், உலக நாடுகளின் நீதிமன்றத்திற்கு இப்பிரச்சினையை எடுத்துச் செல்லவேண்டிய அவசியமில்லை என்றும் கூறியுள்ளார்.

வடநாட்டு அகதிகள் வாழ்வுபெறத் திட்டம்

மேற்கு வங்கத்தின் தாராளம்

கல்கத்தா, எப். 24—
கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வந்துள்ள அகதிகளில் 1,20,000 பேர்களுக்கும் புனர்வாழ்வளிக்க மேற்கு வங்க அரசாங்கம் இசைந்துள்ளதாம்!

மீதமுள்ள 2,10,000 அகதிகள் வேறு இடங்களில் குடியமர்த்தப்படலாம் என்று தெரியவருகிறது.

சம்பத் எச்சரிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"சனநாயக உரிமைகளுக்காகத் தி. மு. கழகம் இதுவரை போராடி வந்துள்ளது. சட்டசபைக்குச் சென்றுள்ளதும் அதற்காகத்தான். சட்டசபை, மக்கள்சபை உறுப்பினர் பதவிகள், தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கு இடையூறு விளைவிக்கும் என்று நாங்கள் உணர்ந்தால்; அந்த நொடியிலேயே பதவியிலிருந்து விலகிக்கொள்ளத் தி. மு. கழகம் தயாராக இருக்கிறது.

தி.மு.க. என்ன செய்யும்?

"மக்கள்சபைக்கு தி.மு. கழகச் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இரண்டு உறுப்பினர்களால் என்ன செய்ய முடியும்—என்று கேட்கப்படுகிறது.

அக்கேள்விக்குநான் சொல்லும் பதில் இதுதான்:—எச். வி. காமத் அசோக் மேத்தா போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் மக்கள்சபையில் இடம் பெற்றிருந்தார்கள். அவர்கள் பல கேள்விகளைக் கேட்கத்தான் செய்தார்கள். ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள குறைபாடுகளையே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

"ஐந்தாண்டுத் திட்டத்தில் அணைகள் கட்டுவதற்கு ஒதுக்கிய பணத்தில் கையாடல் நடைபெற்றது குறித்தும், அணைக்கட்டு வேலைகளுக்காகப் பொருள்கள் வாங்கியதில் ஊழல்கள் நிகழ்ந்ததுபற்றியுமே அவர்கள் கேட்டார்கள்; ஆனால், தி. மு. கழகத்தினர் கேட்கும் கேள்விகள் அத்தகையதாக இருக்காது."

'அரிசன்' என்று பொய்கூறினாராம்

ஐந்தாண்டுக் காலம் உறுப்பினர் பதவியையும் வகித்துவிட்டாராம்!

இறுதியில் 6-மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்

அம்பாலா, எப். 23—
இந்தியப் பாராளு மன்றத்தில் இடம் பெறுவதற்காக தம்மை அரிசன் என்று பொய்ச் சாட்சியங்கள் சமர்ப்பித்து அந்த அடிப்படையில் 5-ஆண்டுக் காலம் மக்கள்சபை உறுப்பினராக இருந்த வீரேந்திரகுமார் சத்யவதிக்கு அம்பாலா மாஜிஸ்திரேட் 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளார்.

தீர்ப்பை எதிர்த்து, அந்த முன்னாள் மக்கள்சபை உறுப்பினர் மனுச்செய்து கொள்ளப் போவதால் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த அக்கறைக்குக் காரணம் என்னவோ?

புதுடில்லி, எப். 24—
இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழு, நாட்டில் ஏலக்காய் பயிரைப்பற்றி அக்கறை காட்ட முனைந்திருக்கிறது.

இந்தப் பயிரை தோட்டத் தொழிலாக மேற்கொள்வதற்குப் போதிய ஏலக்காய் செடிகளை வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவில் பாதியை மத்திய அரசு மானியமாக அளிக்க முன்வந்துள்ளது.

ஏக்கருக்கு ரூ. 150-க்கு மேற்படாதவாறு கடனுதவியளிக்கப்படுமாம்.

இந்தத் தொழிலில் அக்கறை கொண்டுள்ள மாநிலங்கள், அதற்கான திட்டம் தயாரித்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சிம்சன் & குரூப்

கம்பெனி தி. மு. க. தோழர்கட்கு:

"21-4-57ல் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிர்வாகக் கூட்டத்தில், வெற்றி பெற்ற தி. மு. கழக சட்டமன்ற உறுப்பினர்களான அண்ணா அவர்களையும், மற்றும் 14 பேர்களையும் அழைத்துப் பாராட்டுவதற்கும், பொதுச்செயலாளரை அழைத்து மே விழா நடத்தவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான நன்கொடை இதுவரையில் அளிக்காதவர்கள் கூடியவிரைவில் அளிக்குமாறு வேண்டுகிறோம்"

என்று, விழாக் குழுப் பொருளாளர் தோழர் வி. எஸ். நடராசன் கேட்டுக்கொள்கிறார்.

பாராட்டுக் கூட்டம்

26—4—57 மாலை சென்னை—10-வது வட்டம், (அம்மன் கோவில்) பிடாரியார் கோவில் தெருவில் (பிரபாத் அருகில்), தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களைப் பாராட்டி தோழர் அ. இராசகோபால் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், கண்ணதாசன், எஸ். எஸ். தென்னரசு, வே. திருநாவுக்கரசு, வி. சி. தமிழ்தாசன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

சேலம் தொகுதி தேர்தல்

வழக்கு நிதிக்காக சிறப்புக் கூட்டம்

28-4-57 காலை 10-மணிக்கு பெங்களூர்—காந்திநகர் குப்பி தியேட்டரில் சிறப்புக் கூட்டமொன்று நடைபெறும்: அதுபோது, அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் 7—4—57-ல் சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளை 'டேப் ரெகார்டரில்' (Tape Recorder) ஒலி பரப்பப்படும்"

என்று, பெங்களூர் மாவட்ட சிறப்புக் கூட்ட அமைப்பாளர்கள் அறிவிக்கின்றனர்.

பெங்களூர் மாவட்டத் தோழர்களுக்கு:

"பெங்களூர் மாவட்டத்திலுள்ள தி. மு. கழகக் கிளைக் கழகங்கள், சார்புடைய மன்றங்கள், படிப்பகங்கள், நாடக மன்றங்கள், தனிப்பட்ட ஆதரவாளர்கள், நம் கழக முன்னணி வீரர்களையும், தலைவர்களையும் நிகழ்ச்சிகளுக்கு அணுகும்போது மாவட்டத்தின் அனுமதி பெற்றுத்தான் நிகழ்ச்சிகள் நடத்தவேண்டும் எனக் கோருகிறேன்"

என்று, பெங்களூர் மாவட்டத் தி. மு. க. செயலாளர் தோழர் எஸ். வி. பதி அவர்கள் அறிவிக்கிறார்.

பறக்கும் குண்டு கைவிரித்துவிட்டது!

தோல்வியைவிளைவித்த வேடிக்கை

வாஷிங்டன், எப். 24—
1,500 மைல் தூரத்திலுள்ள இலக்குகளைத் தாக்குவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட 'தோர்' என்ற பறக்கும் குண்டு, தரையிலிருந்து சில அடி உயரம் பறந்ததும், கீழே விழுந்து விட்டதாம்!

இதேபோன்று கடந்த ஜனவரித் திங்களில் நடைபெற்ற சோதனையும் தோல்வியடைந்துள்ளதாம்!

கழகக் கூட்டங்கள்

★

மணப்பாறை:

பழைய சந்தைத் திடலில்
27—4—57 மாலை 6-மணிக்கு
தலைவர்: மா. இளங்கீரன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
தமிழழகன்
நா. சக்கரபாணி

★

பிரிமிசை:

26-4-57 மாலை 6-30 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
பேசுவோர்:
அரு. ஆதிமூலம்
வி. மு. விசயகோபால்

★

திருப்பெயர்:

பொதுச்சாவடி மைதானத்தில்
27-4-57 மாலை 6-30 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: இரா. பாலு
பேசுவோர்:
என். வி. நடராசன்
எஸ். நெடுமாறன்
அரு. ஆதிமூலம்
பி. ஆர். இரத்தினசாமி

பெரம்பலூர்—நகரக் கிளை அமைப்புக் கூட்டம்

27—4—57 காலை 9 மணிக்கு மேற்படி கூட்டம் பெரம்பலூர் இலட்சுமி டூரிங் டாக்கீசில், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும்; அதுபோது நிர்வாகிகள் தேர்வும் நடைபெற விருப்பதால் பொது உறுப்பினர்கள் அனைவரும் வருகைதரக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எலம்பலூர் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம்

27—4—57 பகல் 11½ மணிக்கு கழக அலுவலகத்தில் மேற்படி கூட்டம் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும்; அதுபோது நிர்வாகிகள் தேர்வும் நடைபெற விருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் வருகைதரக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

26—4—57 மாலை 6 மணிக்கு எண் 4/88 பிராட்வேயிலுள்ள சென்னை—11-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில், தோழர் ஜே. அரசு தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, 'சிந்தனை' எனும் பொருள் பற்றி கழகத் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

27—4—57 மாலை 6 மணிக்கு சென்னை—5வது வட்ட இளங்கோ படிப்பக மனையில், தோழர் நடராசன் தலைமையில், 'கல்வி' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சட்டசபை உறுப்பினரின் உண்ணு நோன்பு!

திருச்சூர், எப். 23—
கொச்சிக்கு அருகில் உள்ள முரிஸ்சடார் என்ற இடத்தில் 'ஓடு' செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் கோரிக்கைகளைக் கோள அரசாங்கம் ஏற்பதற்குச் சம்மதம் தெரிவிக்கும் வரையில் 'சாகும் வரை' உண்ணுநோன்பு மேற்கொள்ளப் போவதாக பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர் சி. ஜி. ஜனார்த்தனன் தெரிவித்துள்ளார்; உண்ணுநோன்பையும் அவர் மேற்கொண்டுவிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.